# செப்டம்பர் – 2025 (மடல் - 25) செய்தி – 8




**"நான் உங்களுக்கு நற்போதகத்தைத் தருகிறேன்: என் உபதேசத்தை விடாதிருங்கள்." [நீதிமொழிகள் 4:2]**

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| பெண்கள் பகுதி | 6 |
| Children's Corner | 10 |
| வேத வினாக்கள் | 23 |
| கோதுமை மணி | 26 |
| துணுக்குகள் | 28 |
| ஆலய பக்கம் | 30 |

# ஆயர் மடல்

***"ஒருவன் தன் புத்திரனைச் சிட்சிக்கிறது போல உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிட்சிக்கிறார் என்று நீ உன் இருதயத்தில் அறிந்துகொள்வாயாக." [உபாகமம் 8:5]***

## இயேசுவே சிறந்த ஆசிரியர்

***ஒருவன் தன் மகனுக்குக் கற்றுக் கொடுப்பதுபோல, உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்கும் கற்றுக்கொடுத்தார் என்பதை உங்கள் உள்ளத்தில் உணர்வீர்களாக.***

**இணைச் சட்டம் 8:5** (புதிய மொழிபெயர்ப்பு)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். கடந்த மாதம் ஆண்டவர் நமக்கும், நமது குடும்பத்திற்கும் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் ஆசீர்வாதங்களுக்காகவும் ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். சிறப்பாக விடுமுறை நாட்களை மகிழ்சியோடு கொண்டாடவும், உறவுகளோடும் சொந்தங்களோடும் உறவாடி மகிழவும், பயணங்களில் பாதுகாப்பையும் அருளிச்செய்த கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். நமது வாழ்வில் கிருபையாய் ஒரு புதிய மாதத்தைத் ஆண்டவர் தந்திருக்கிறார். இந்த புதிய மாதம் நமக்கு ஆசீர்வாதமான காலங்களாக அமைய ஆண்டவர் அருள் செய்வாராக.

செப்டம்பர் மாதம் 5ஆம் நாள் ஆசிரியர் தினமாகக் கொண்டாடுகிறோம். ஒரு நல்ல ஆசிரியராக இருந்து, ஜனாதிபதியாக உயர்ந்து ஆசிரியர்களுக்குப் பெருமை சேர்த்த டாக்டர். இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளை ஆசிரியர் தினமாகக் நாம் கொண்டாடுகிறோம். நமக்குக் கற்றுக் கொடுத்த ஆசிரியர்களுக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்தவும், கற்பித்தல் பணியில் ஈடுபடுகின்ற ஆசிரியார் பெருமக்களுக்காகவும், கல்வி கற்கின்ற மாணவ மாணவிகளுக்காகவும் ஜெபிக்கவும் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

ஆண்டவரே முதன்மை ஆசிரியர். உலகின் ஆரம்பம் முதல் ஆண்டவர் மனுக்குலத்துக்குக் கற்றுக் கொடுத்துக்கொண்டே இருக்கின்றார். ஏதேன் தோட்டத்தில் நன்மைக்கும் தீமைக்கும் இடையே இருக்கின்ற வேறுபாட்டை ஆதாம் ஏவாளுக்குக் கற்றுக்கொடுக்கிறார். (மீகா 6:8) இஸ்ரவேல் மக்களின் வனாந்தரப் பயணத்திலே ஒரு தகப்பன் பிள்ளைக்குக் கற்றுக் கொடுப்பது போன்று ஆண்டவர் இஸ்ரவேல் மக்களுக்குக் கல்வி புகட்டுகிறார்.

இயேசு கிறிஸ்து ஒரு சிறந்த குரு. மக்கள் இயேசு கிறிஸ்துவை ரபி, போதகரே என்று அழைத்தார்கள். இயேசு ஒப்பற்ற ஆசிரியராக இருந்தார். முறையாகக் கல்விசாலைக்குச் சென்று கல்வி கற்றதாக எந்தப் பதிவும் இல்லை, ஆனால், கடவுளின் மகனாக

இருந்ததால், பூமியில் வாழ்ந்த எவரையும் விட இயேசு கிறிஸ்து கற்பித்தல் பற்றி அதிகம் அறிந்திருந்தாரா் என்பது உண்மை. இயேசு ஒவ்வொருவரையும் நேசித்தார். மிகவும் மோசமான பாவிகளைக்கூட இயேசு நேசித்தார், ***தான் கற்பிக்கப் போகிறவர்களை உண்மையாக நேசிக்காமல் யாரும் சிறந்த ஆசிரியராக இருக்க முடியாது.***

***இயேசு கிறிஸ்து தாம் கற்பித்தப் பாடத்தைக் குறித்த பரிபூரண அறிவால் சிறந்த போதகராக இருந்தார்.*** குறிப்பாக பிதாவாகிய கடவுளைப் பற்றிய பரிபூரண அறிவு இயேசு கிறிஸ்துவுக்கு இருந்தது, இயேசு கிறிஸ்துவின் கற்பித்தலின் அடிப்படைப் பொருள் 1. கடவுள், 2. கடவுளின் விருப்பம், 3. பூமிக்குரிய வாழ்க்கையில் கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமையின் விளைவுகள், மற்றும் 4. இறுதி நியாயத்தீர்ப்பு. 5. விண்ணக வாழ்வு போன்றவைகள்.

கன்னி மரியாளின் பிறப்புக்கு முந்தைய நிலையில் தாம் கடவுளுடன் இருந்தார் என்ற உண்மையை இயேசு தம் கேட்போர் முன் வைக்கிறார். ஒவ்வொரு மனிதனின் எண்ணங்கள், ஏக்கங்கள், கற்பனைத் தேவைகள், உண்மையான தேவைகள், நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை இயேசு முழுமையாக அறிந்திருந்தார். இயேசு கிறிஸ்துவின் போதனைகள் ஆற்றல் மிக்கதாகவும், அதிகாரம் உள்ளதாகவும் இருக்கிறது. எதிரிகள்கூட இயேசுவின் போதனையைக் கேட்டு ஆச்சரியப்பட்டார்கள். பலதரப்பட்ட மக்களுக்கும் கற்றுக் கொடுக்கிறார். இயேசு கற்றுக்கொடுக்கின்ற சூழலும், இடமும் மாறுபட்டுக்கொண்டே இருக்கிறது. இயேசு கிறிஸ்து மக்களின் கேட்டறியும் திறமைக்கு ஏற்றவாறு கற்றுக் கொடுக்கிறார். ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டுவதற்கு ஒரு நல்ல ஆசிரியரைப்போன்று கேள்விகளைக் கேட்டு விடையை எதிர்பார்க்கிறார்.

***இயேசு கிறிஸ்து தாம் போதித்த படி வாழ்ந்து காட்டுகிறார்.*** இயேசுவுக்கு வழி தெரியும், வழியைக் காட்டியிருக்கிறார், தாம் முன் செல்கிறார், நம்மையும் அழைத்து செல்கிறார். நல்ல ஆசிரியரின் பண்புகளான தாழ்மை, அன்பு, பொறுமை, கனிவு, இரக்கம், சகிப்புத்தன்மை ஆகியவற்றை நடைமுறைப்படுத்திக் காட்டியிருக்கிறார். நல்ல குருவாக இயேசு நமக்கு மாதிரியை விட்டுச் சென்றிருக்கிறார். ***தம்மைவிட சிறப்பாகத் தம் மாணவர்கள் வளர்வதை இயேசு விரும்புகிறார்.*** (யோவான் 14:12) இயேசு கிறிஸ்துவை முன்மாதிரியாகக்கொண்டு, சிறப்பான சமுதாயத்தை உருவாக்குவோம்.

ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக!

கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக!

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : asamuelrev@gmail.com*

***கிறிஸ்துவின் பணியில்***
***தங்கள் அன்பிற்குரிய ஆயர்***
**Rev. Dr. A. Samuel**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் அற்புதமாக ஆச்சரியமாகப் பாதுகாத்து வழி நடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கும் நம்முடைய குடும்பங்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக. **"நான் உங்களுக்கு நற்போதகத்தைத் தருகிறேன்: என் உபதேசத்தை விடாதிருங்கள்." நீதிமொழிகள் 4:2**

**உலகின் தலைசிறந்த ஆசிரியர் இயேசு கிறிஸ்து:**

இயேசு கிறிஸ்து முழு உலகிற்கும் ஒளியும், வாழ்வும், சத்தியமும் போதிக்கும் தலைசிறந்த ஆசிரியராக இருக்கிறார். அவருடைய போதனைகள் வெறும் வார்த்தைகள் அல்ல, அவை நித்திய வாழ்வுக்கு வழிநடத்தும் பாதைகள். இயேசுவின் போதனைகள் மக்களை வியப்பில் ஆழ்த்தின, அவருடைய வார்த்தைகள் அதிகாரத்துடனும் ஞானத்துடனும் வெளிப்பட்டன. (மத்தேயு 7:28-29) இயேசு கிறிஸ்துவின் போதனையானது அன்றைய சமயத் தலைவர்களின் போதனைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தது. அவருடைய வார்த்தைகளில் ஒரு தெய்வீக அதிகாரம் இருந்தது, அது மிகவும் மக்களை கவர்ந்தது. (மாற்கு 1:22) இயேசுவின் போதனையின் தனித்துவமான அதிகாரம் வெளிப்படுகிறது. (யோவான் 7:46) இயேசு பழைய ஏற்பாட்டு வேதவசனங்களை எடுத்துரைத்து அது எப்படி தம் வாழ்வில் வெளிப்படுகிறது என்று விளக்கிக்காட்டுகிறார். அவருடைய சீடர்கள் என்பதை மிகத் துல்லியமாக புரிந்துகொள்ள முடியாதவற்றை தனிமையில் அவர்களுக்குத் தெளிவாக்குகிறார். இதில் இயேசு கிறிஸ்துவின் ஞானமும், போதிக்கும் திறனும் அற்புதமாக வெளிப்படுத்துகிறார்.

**1. இயேசு கிறிஸ்து நல்ல ஆசிரியர்: Good Teacher (லூக்கா 10:30-35)**

இயேசு கிறிஸ்து ஒரு நல்ல ஆசிரியராக, அன்பை வெளிப்படுத்தக்கூடிய நல்ல சமாரியனை குறித்த உவமையைப் போதிக்கிறார். ஆசாரியனும், லேவியனும் துன்பத்தில் இருக்கும் ஒருவருக்கு உதவி செய்யாமல் கைவிட்ட நிலையில், ஒரு சமாரியன் மட்டும் அவனுக்கு உதவு முன் வருகிறான். தனது நேரத்தை தனது பணத்தை தனது வாகனத்தைத் துன்பத்திலிருக்கும் மனிதனோடு பகிர்ந்து கொள்கிறான். தேவையுள்ள

மக்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்பதை இயேசு கிறிஸ்து கற்றுக்கொடுக்கிறார். இறையன்பையும் நற்செயல்களையும் நமது வாழ்வில் வெளிப்படுத்த வேண்டும். சமாரியர்கள் யூதர்களால் அதிகமாக வெறுக்கப்பட்டார்கள். சமாரியர்களை இழிவாகக் கருதினர்கள். ஆனால் யூதர்களால் புறக்கணிக்கப்பட்ட சமாரியனிடத்தில் தேவனுடைய அன்பு இருந்ததாலும், அதை துன்பத்திலிருந்த மனிதனிடம் செயலில் காட்டியதாலும் ஆண்டவர் சமாரியனை நீதிமானாகப் பார்க்கிறார். இயேசுவின் போதனைகள் மக்களுக்கு நம்பிக்கையும் ஆறுதலும் மன அமைதியும் கொடுத்தது. மக்கள் தங்கள் வாழ்க்கையில் வருகின்ற துன்பங்களை எதிர்கொள்ளவும், நம்பிக்கையுடன் வாழவும் இயேசுவின் போதனைகள் ஊக்கத்தைக் கொடுத்தன. இன்றும் இயேசு கிறிஸ்துவின் போதனைகள் மனக்குலத்திற்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகவும், சிறந்த எதிர்காலத்தை உருவாக்க ஆற்றல் மிக்கதாகவும் இருக்கிறது.

**2. இயேசு கிறிஸ்து நல்ல போதகர்.** Rabi

ஒரு சாதாரண ஆசிரியரைக்காட்டிலும் தேவனுடைய வார்த்தையைக் கற்றுக்கொடுப்பதில் இயேசு கிறிஸ்து மேலானவராக இருக்கிறார். சாதாரண எளியமக்களும் புரிந்துகொ*ள்ளும்* வண்ணமா*ய்ப்* போதிக்கிறார். குறிப்பாக இரட்சிப்பு, விண்ணரசு, வருகை, நித்திய வாழ்வு போன்ற கடினமான காரியங்களைகூட சாதாரணமான மக்கள் நன்கு அறிந்தப் பொருட்களைக் கொண்டு, உவமைகள் வழியாகவும், கதைகள் வழியாகவும் கற்றுக்கொடுக்கிறார். மார்த்தாள், மரியாள் இரண்டு பேருமே இயேசுவை தங்கள் வீட்டிற்கு அழைத்து உபசரிக்கிறார்கள். மார்த்தாள், இயேசு கிறிஸ்துவை விருந்தாளியாக வரவேற்று உபசரிக்கின்ற அனைத்து செயல்களையும் கவனிக்கிறாள். ஆனால் மரியாள் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளவும், இரட்சிப்பின் வழியை அறிந்து கொள்ளவும் இயேசு கிறிஸ்து பாதத்தில் அமர்ந்து இயேசுவின் இறைவார்த்தைகளைக் கேட்கிறார். இயேசு கிறிஸ்து மரியாள்ளைப் பாராட்டுவதோடு, மறுக்கப்பட்டக் காலத்திலும் இயேசு கிறிஸ்து இரகசியத்தைக் கற்றுக்கொடுக்கிறார். பெண்களுக்கு மறை கல்வி பெண்களுக்கு இறையரசின் நம்முடைய வாழ்க்கையிலும், பிற மக்கள்மிது அன்பும் கரிசனையும் காட்டுவதோடு அனுதினமும் ஆண்டவரின் பாதப்படியில் அமர்ந்திருந்து போதகராகிய இயேசுவின் திருவார்த்தைகளைக் கேட்டு அவரின் விருப்பத்திற்கு இசைய வாழ்வோம். ஆண்டவர் நம்மையும் நமது குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக.

**மீட்பரின் பணியில்**

***திருமதி.ஜெபா சாமுவேல்***



## வாழ்க்கை என்னும் பள்ளியில் வெற்றி நடை போடுவது எப்படி?

பள்ளியில் அடியெடுத்து வைக்கும் சிறுவனுக்கு எல்லாம் புதிது. அழுதுகொண்டே அம்மாவுக்கும் அப்பாவுக்கும் டாடா காட்டி விட்டு வகுப்பறைக்கு செல்கிறான். ஆனால் சில நாட்களில் எந்த தயக்கமும் இல்லாமல் சந்தோஷமாய் போகிறான் சிறுவன்! இவர் யாரோ என்று பயத்தோடு ஆசிரியரை பார்த்த சிறுவனுக்கு, தன் அம்மா, அப்பாவைப் போலவே, ஆசிரியரும் புதுபுதுக் காரியங்களைக் கற்றுக் கொடுப்பவர் என்று தெரிந்தவுடன் பயமெல்லாம் போய்விடுகிறது. வீட்டில் பாடம் படிக்கும்போது, பெற்றோர் ஏதாவது திருத்தினால் கூட அதை ஒத்துக்கொள்வதில்லை. "எங்க டீச்சர் இப்படித்தான் சொல்லிக் கொடுத்தார்கள், உங்களுக்கு ஒன்னும் தெரியாது" என்று சொல்லிவிடும் அச்சிறு பிள்ளை. டீச்சர் சொல்வது தான் தெய்வவாக்கு!

நம்மை இவ்வுலகில் வாழ படைத்த நம் தேவனும் நம்மிடம் இத்தகைய நம்பிக்கையை எதிர்பார்க்கிறார். இயேசுவை நம் வாழ்க்கைப் பள்ளிக்கூடத்தின் ஆசிரியராக ஏற்றுக்கொள்ளும் வரை, நம் கதையும் பயத்தோடு பள்ளியில் அடியெடுத்து வைக்கும் குழந்தையைப் போன்றது தான்! நாளை என்ன நடக்குமோ? எதிர்காலம் எப்படி இருக்குமோ? இப்படி ஆகிவிடுவோமா? என்று எதற்கெடுத்தாலும் பயம். நம்மை படைத்ததோடு நம்மை கைவிட்டு செல்பவர் அல்ல நம் ஆண்டவர். "நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன் மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்" (சங்.32:8) என்று சொல்கிறார்.

### ⁂ போதிக்கும் ஆண்டவர்



நம்மோடு பேச விரும்புகிறார் நம் ஆண்டவர். பள்ளிக்கு செல்லும் மாணவன் ஆசிரியர் கற்பிப்பதை கேட்டாலொழிய ஒன்றும் கற்றுக்கொள்ள இயலாது. அதுபோல நம் ஆண்டவரின் சத்தத்தைக் கேட்க, நாம் பழகிக்கொள்ள வேண்டும். அப்பொழுது தான் எது வாழ்க்கைக்கு பிரயோஜனமானது (ஏசாயா 48:17) என்று அவர் போதனையின் மூலம் அறிந்துகொள்ள முடியும். ஆண்டவர் போதித்ததை கேட்டதால்தான், முரட்டு சபாவமுள்ளவனாயிருந்த சவுல், ஒரு அப்போஸ்தலனாக மாற முடிந்தது. ஆண்டவரின் போதனையால் அர்த்தமில்லாத வாழ்க்கையும் அர்த்தமுள்ளதாக மாறும்!

### ⁂ வழிநடத்தும் ஆண்டவர்

பிரயோஜனமாயிருக்கிறதை போதித்த ஆண்டவர், நாம் வலதுபுறம் சாயும்போதும், இடதுபுறம் சாயும்போதும், வழி இதுவே இதிலே நடவுங்கள் என்று தொடர்ந்து



வழிகாட்டுகிறார். தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களுக்கு அறிவு புகட்டி, அடுத்த வகுப்புக்கு அல்லது அடுத்த நிலைக்கு செல்ல தாயாராக்கும் ஆசிரியரைப் போல, நமக்குத் தெரியாத பாதையில் அழைத்து, இருளை வெளிச்சமாக்கி, கோணலானதை செவ்வைப்படுத்தும் தேவன் நம் ஆண்டவர் (ஏசாயா 42:16). அடுத்த அடி எப்படி எடுத்து வைப்பது, எங்கு செல்வது என்று திகைக்கும் வேளையில், இஸ்ரவேல் மக்களுக்கு வழிகாட்டின அதே ஆண்டவர் நமக்கும் வழிகாட்டுவார்!



### ⁂ ஆலோசனை தரும் ஆண்டவர்

இன்று உலகில் ஆலோசனை மையங்கள் ஏராளம். ஆலோசகர்களும் மலிந்து கிடக்கின்றனர். ஆலோசனை அவசியம். ஆனால் அது சரியான இடத்தில் இருந்து வரும் வேண்டும். பெற்றோரும் ஆசிரியரும் தரும் ஆலோசனையை ஏற்காத பிள்ளை வழிமாறி, சீர்கெட்டு போகும் (நீதி.11:14). நம் வாழ்வு சீர்குலையாது, சீராக இருக்க, புத்தியாய் வாழ்க்கையில் நடந்துகொள்ள, ஆலோசனைக் கர்த்தராம் இயேசுவின் ஆலோசனை மிகவும் அத்தியாவசியம். அகித்தோப்பேலின் ஆலோசனையைக் கேட்டு மோசம் போனான் அப்சலோம். தாவீதோ ஆண்டவரின் ஆலோசனையைக் கேட்டு, இழந்த அரியாசனத்தை மீண்டும் பெற்றான். எனவே அங்கும் இங்கும் சென்று, உலகத்தாரிடம் ஆலோசனை கேட்டு குழம்பி போவதை விட்டு, ஆண்டவரின் ஆலோசனை கேட்டு தெளிவு பெற்றுக்கொள்வதே உத்தமம். எனவே நாம் ................

- ‡ மரியாளைப் போல ஆண்டவரின் பாதத்தில் அமர்ந்து இருந்தால் தான் ஆண்டவர் கற்றுத் தருவதைக் கேட்கமுடியும் (லூக்கா 10:39,42). நம்மை விட்டு எடுபடாத நல்ல பங்கை வாழ்க்கையில் பெறமுடியும்.
- ‡ அவர் வழிநடத்துதலை உணர்ந்துகொள்ள தேவனுடைய ஆவியானவர் நம்மோடு எப்போதும் வாசம்பண்ணும்படி பரிசுத்தமான ஜீவியம் பண்ணவேண்டும் (சங்.143:10).
- ‡ அவர் ஆலோசனையை அனுதினம் கேட்டு நடக்க வேதவசனமாகிய மன்னாவை அனுதினமும் உட்கொள்ளவேண்டும் (சங்.1:2-3, சங்.119:165).

இம்மூன்று காரியங்களை நாம் கடைபிடிக்கும்போது, வாழ்க்கை என்னும் பாடசாலையில், இயேசு என்னும் ஆசிரியரோடு, வெற்றியுள்ள மாணவனாக, சமாதானத்தோடு ஓட்டத்தை முடிக்க முடியும். பட்டமளிப்பு விழாவில் தன் மாணவனைக் கண்டு பூரிக்கும் ஆசிரியரைப் போல, நம் ஆண்டவரும், நம்மை அவர் சமூகத்தில் கண்டு, நாம் ஜீவகிரீடம் பெறும்போது மகிழ்ச்சி அடைவார்!

**ஜெபசீலி ஆசீர்**

# வேதாகமப் பெண்கள்

## நல்ல ஆசிரியர் "பிரிஸ்கில்லா" [Prisca]
## அப்போஸ்தலர் 18

சுவிசேஷப் பணியை இணைந்து செய்த தம்பதியினர் ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும். பிரிஸ்கில்லா என்றால் "தகுதியான" என்று பொருள். ஆக்கில்லா பொந்து தேசத்தை சேர்ந்த ஒரு குடிபெயர்ந்த யூதர். ரோம பேரரசர் கிளாடியஸ் யூதர்களை ரோமிலிருந்து விரட்டியதால் அவர்கள் ரோமிலிருந்து கொரிந்துக்கு வந்தார்கள்.

பவுலோடு சேர்ந்து பணி புரிந்தார்கள். அவர்கள் கூடாரம் தைக்கும் தொழில் செய்தார்கள். பவுலும் அதே தொழில் செய்து வந்ததால், பவுலுடன் சேர்ந்து வேலை செய்தார்கள் (அப்.18:3). பவுலோடு எபேசுவுக்கும் சென்றார்கள். அங்கே அப்பொல்லோஸ் என்ற வேதாகமத்தின் வல்லவனுக்கு, **தேவனுடைய வழியை இன்னும் தெளிவாகக் கற்றுக் கொடுத்தார்கள்** (அப்.18:24-26). சபைக்கு தங்களது வீட்டை அர்ப்பணித்தவர்கள் பவுலால் பலமுறை வாழ்த்தப்பட்டவர்கள். என்னுடனே கிறிஸ்து இயேசுவுக்குள் உழைத்தவர்கள் என்று பவுல் அவர்களை புகழ்கிறார். அவர்கள் பவுலுக்காக தங்கள் உயிரையும் ஆபத்தில் வைத்தார்கள் என்றும் குறிப்பிடுகிறார்.

பிரிஸ்கில்லா வேதாகமத்தில் காணப்படும் மிகுந்த அறிவுள்ள விசுவாசமுள்ள பெண். தன் கணவருடன் இணைந்து கிறிஸ்தவ சபை வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகித்தார். விட்டுக் கொடுக்கும் தன்மையும் தியாக வாழ்வும் இவர்களில் காணப்பட்டது.

### வீட்டினருகே கனிதரும் திராட்சக்கொடி:

இருவரும் தாங்கள் வைக்கப்பட்ட சூழ்நிலையிலேயே தேவனுக்கு ஊழியம் செய்தார்கள். தன்னுடைய வீட்டை ஊழியத்திற்கு திறந்து கொடுத்தார்கள். நமது இல்லம் தேவன் நமக்கு கொடுத்த ஈவு. அது சுய திருப்திக்காக மட்டுமல்ல, தேவ ஈவான நற்செய்தியை பரப்பும் கருவியாகவும் பயன்படுத்தப்பட வேண்டும்.

- கிறிஸ்துவின் ஒளியைப் பெற்ற குடும்பம்
- சபையில் ஒரு தீபம்
- அது சமுதாய குன்றின் மேல் வைக்கப்பட்ட பட்டணம்
- உலகில் ஒரு கலங்கரை விளக்கு

இவர்கள் பூர்வமுதல் பாழாய் கிடந்த ஸ்தலங்களைக் கட்டுபவர்கள். தலைமுறை தலைமுறையாக இருக்கும் அஸ்திபாரங்கள் மேல் நீ கட்டுவாய், திறப்பானதை அடைக்கிறவன் என்றும், குடியிருக்கும்படி பாதைகளைக் திருத்துகிறவன் என்றும் நீ பெயர் பெறுவாய் என்று ஏசாயா 58:12-ல் பார்க்கிறபடி குடும்பத்தை அமைத்தவர்கள். அப்படிப்பட்ட குடும்பமாக நமது குடும்பங்களையும் தேவன் அமைப்பாராக!

**ஷர்மிளா ராஜேஷ்**




அக்டோபர் மாத தலைப்பு

# முதுமை

# *Old Age*

# CHILDREN'S CORNER

Dear Children,

The theme this September is "**GOOD TEACHER**".



"Imagine we're all in a classroom. You have your books, your pencils, and your backpack ready to learn.

A good teacher doesn't just give you homework—**he helps you understand and shows you the right way to do it.** That's what Jesus does for us:

**He Shows Us the Right Way** – teacher shows you the right answer. Jesus shows us the right way to live—loving God and loving others.

**He Teaches with Love** – Some teachers can be strict, but the best teachers care about you. Jesus teaches us with love, patience, and kindness.

**He Leads by Example** –The best teachers don't just talk, they show. Jesus forgave people, helped the sick, and loved everyone. He showed us how to live by doing it Himself

**He Challenges Us to Grow** – A good teacher doesn't let students stay stuck; Jesus stretches our faith, asks hard questions, and helps us grow stronger. (Luke 6:46–49, the wise builder)

**He Gives Us the Holy Spirit as Our Helper** – Even when we can't see Him, His Spirit continues to guide us, like the best Teacher who never leaves. (John 14:26)

**"You call me Teacher and Lord, and rightly so, for that is what I am." – John 13:13**







.

# SAYING IT WITH PICTURES...




How can a young person stay on the path of purity? By living according to your word. -Psalm 119:9 NIV




He replied, "Because you have so little faith. Truly I tell you, if you have faith as small as a mustard seed, you can say to this mountain, 'Move from here to there,' and it will move. Nothing will be impossible for you." — Matthew 17:20 NIV

## NAMES OF GOD #8 EL DEAH

### EL DEAH - THE GOD OF KNOWLEDGE or "God Who Knows All Things."

The name comes from 1 Samuel 2:3, in Hannah's prayer:

"Do not keep talking so proudly or let your mouth speak such arrogance, for the Lord is a God of knowledge (El Deah); and by Him deeds are weighed."

Our God is the God of all knowledge. HE is all-knowing. Since God knows everything that's going to happen, we can trust him.

### The Two Paths



Daniel finished high school and wasn't sure which direction to take. Some friends chose fun, others chased quick money.

One day, his grandpa showed him two roads: one wide and easy, the other narrow and rocky. "Life is like these paths," Grandpa said. "The easy one looks good now but can lead to regret. The hard one builds strength and blessing. Remember—God is El Deah, the God of Knowledge. He sees the end of the road even when we can't. Trust Him, and He'll guide you to live well."

Daniel prayed, "El Deah, You know all things. Teach me and lead me in the right path."

## TINY TOTS SECTION

### COLOR IN...




## Shepherd's Roundup

**INSTRUCTIONS:** Find and circle 10 sheep hidden in the picture below.



# JESUS TEACHING IN THE TEMPLE

## Rejected

**INSTRUCTIONS:** Circle the nine silly items that do not belong in the Bible story art.




## Let The Children Come To Me

Matthew 19:13-15

Many parents were bringing their children so that Jesus could pray over them and place his hands on them. The disciples thought Jesus was too busy to take care of the children. But Jesus said, "Let the little children come to me, and do not hinder them for the kingdom of heaven belongs to such as these."

Draw a path to help the little children get to Jesus.



# Break The Code

Use the secret code to figure out what Psalm 107:1 says.

__ __ __ __    __ __ __ __ __ __
20 18 5 22    7 19 26 13 16 8

__ __    __ __ __    __ __ __ __,
7 12    7 19 22    15 12 9 23

__ __ __    __ __    __ __    __ __ __ __;
21 12 9    19 22    18 8    20 12 12 23

__ __ __    __ __ __ __
19 18 8    15 12 5 22

__ __ __ __ __ __ __
22 13 23 6 9 22 8

__ __ __ __ __ __ __.
21 12 9 22 5 22 9



| A | B | C | D | E | F | G | H | I | J | K | L | M |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 26 | 25 | 24 | 23 | 22 | 21 | 20 | 19 | 18 | 17 | 16 | 15 | 14 |
| **N** | **O** | **P** | **Q** | **R** | **S** | **T** | **U** | **V** | **W** | **X** | **Y** | **Z** |
| 13 | 12 | 11 | 10 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |

Psalm 9:1

I will praise you, O Lord, with all my

__ __ __ __ __.



# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – "Good Teacher"

1. When the people called Jesus "Teacher," what word was often used?

| | | | |
|---|---|---|---|
| a. | Rabbi | b. | Shepherd |
| c. | Prophet | d. | Master |

2. In Mark 10:17, a man asked Jesus, "Good Teacher, what must I do to…?"

| | | | |
|---|---|---|---|
| a. | Be blessed with riches. | b. | Gain wisdom. |
| c. | Inherit eternal life | d. | Heal the sick |

3. How did Jesus often teach His followers?

| | | | |
|---|---|---|---|
| a. | Through parables and stories | b. | Through strict rules only |
| c. | By writing on scrolls. | d. | With riddles. |

4. What was one thing that amazed people about Jesus' teaching?

| | | | |
|---|---|---|---|
| a. | He spoke many languages. | b. | He sang His lessons. |
| c. | He taught with authority. | d. | He always used humor |

5. What lesson did Jesus teach in the Parable of the Good Samaritan?

| | | | |
|---|---|---|---|
| a. | To avoid strangers | b. | To pray in the temple only |
| c. | To love your neighbor as yourself | d. | To give only to the rich |

6. In Matthew 5–7 (Sermon on the Mount), what did Jesus teach about enemies?

| | | | |
|---|---|---|---|
| a. | Hate them | b. | Ignore them |
| c. | Love them and pray for them | d. | Challenge them. |

7. What title did Mary call Jesus after the resurrection in John 20:16?

| | | | |
|---|---|---|---|
| a. | Master | b. | Rabbi |
| c. | Savior | d. | King |

8. In the Parable of the Sower, that Jesus taught, what does the seed represent?

| | | | |
|---|---|---|---|
| a. | Money. | b. | Word of God. |
| c. | Good works. | d. | People. |

9. In the Parable of the Lost Sheep, how many sheep were safe?

| | | | |
|---|---|---|---|
| a. | 1 | b. | 50 |
| c. | 99 | d. | 100 |

10. In the Parable of the Builders, what did the wise man build on?

| | | | |
|---|---|---|---|
| a. | Sand | b. | Rock |
| c. | Water | d. | Grass |

11. When Jesus washed his disciple's feet, what did he teach?

| | | | |
|---|---|---|---|
| a. | How to be clean | b. | How to be a servant. |
| c. | Who was good and bad | d. | How to serve others. |

12. In the Parable of the Lost Coin, how many coins did the woman have?

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| a. | 1 | b. | 5 | c. | 3 | d. | 10 |

# THE FRIENDSHIP CIRCLE AND THE GOOD TEACHER

Mia loved being part of her friend group at school.



But lately, the girls had started gossiping and leaving others out.

Mia felt torn—if she didn't join in, she might lose her friends; but deep down, she knew it wasn't right.

One night at youth group, she read Jesus' words in John 13:34: "Love one another. As I have loved you, so you must love one another."



It struck her—Jesus is my Good Teacher. He doesn't just teach facts; He shows me how to live with love.

The next day, when her friends began gossiping, Mia quietly spoke up: "Hey, let's not talk about her like that."

At first, they rolled their eyes, but one friend later told her, "I respect you for that. You're brave."

Mia realized that following Jesus as her Good Teacher wasn't always easy—but it gave her courage to stand for what's right and to show real love.






## Trace the Travels

Look up each Bible reference to find where Jesus traveled. Then mark Jesus' journey on the map.

Jesus went to the Passover Festival in ______________. (Luke 2:41) Then He went home to ______________. (Luke 2:51) Jesus was baptized at the ______________ River. (Luke 3:3,21) He began His ministry, and the Holy Spirit led Him into the ______________ of Galilee. (Luke 4:1) The devil took Jesus to ______________. (Luke 4:9) Jesus returned to ______________ (Luke 4:14) and taught in the synagogues. He came to ______________ (Luke 4:16) and taught in the synagogue. The people rejected Jesus, and He went on to ______________. (Luke 4:31)

**Jesus wanted to do more than fill people's stomachs; he wanted to give them true life. Jesus' teachings were hard to understand. When Jesus talked about his flesh and blood, he was talking about his death and resurrection. When we trust in Jesus, he gives us the gift of eternal life.**




## MARY SLESSOR: LEARNING FROM THE GOOD TEACHER

Mary Slessor was a young woman from Scotland who became a missionary in Nigeria in the late 1800s. One day she saw that twins were being abandoned because the people believed they were cursed.




Instead of turning away, Mary remembered how Jesus, the Good Teacher, welcomed children and said, "Let the little children come to Me" (Mark 10:14).

With courage, she took the babies into her own hut, cared for them, and taught the villagers that every child is loved by God. Slowly, hearts changed. Mary wasn't just teaching with words—she was following the example of Jesus, the Good Teacher, by showing love in action.




## Which Parable Is It?

**Write the letter of parable next to the matching picture. Read the parable in your Bible.**

**Pictures:**




**Parables:**

A. The leaven. Matthew 13:33

B. The mustard seed. Luke 13:18-19

C. The pearl of great price. Matthew 13:45,46

D. The lost coin. Luke 15:8-10

E. The kingdom of heaven is like a hidden treasure. Matthew 13:44

F. The lost sheep. Matthew 18:12-14

G. The sower and the seed. Matthew 13:3-23

H. The house built on a rock. Luke 6:46-49

I. The Good Samaritan Luke 10:29-37

J. The tares and wheat. Matthew 13:24-30

# MISSIONARY JOURNEY

## APOSTLE # 8 THOMAS



Thomas was one of the twelve apostles of Jesus Christ.

He is commonly known as "Doubting Thomas" because he initially doubted the resurrection of Jesus when he was told of it.

Thomas' honest skepticism and inquisitive nature also prompted Jesus to answer - "I am the way and the truth and the life. (John 14:6). Jesus wasn't talking about knowing a route or a location but about knowing a person.




Thomas the Apostle is traditionally said to have preached the Gospel in the Middle East, and later in India, establishing the Church in the modern-day states of Kerala and Tamil Nadu.

He died as a martyr in 72 AD in Chennai, India. He was murdered for his faith in Christ.

## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below...

1. The theme for the month of September is: ______________________________.
2. How is Jesus the Good Teacher ________________________________________?
3. EL DEAH means "________________________________________."
4. _____________________was a missionary to Nigeria in the 1800s.
5. Ps. 119:9 says - _____________________________________________________
6. Thomas was commonly called ____________________________

Children, let us pray –
"Dear Lord Jesus, Thank You for being our Good Teacher. Help us to follow Your way, listen to Your words, and depend on Your Spirit daily. Amen."

God bless,
Mrs. Briliya Jeyaseelan.

# Answers to July/ August Children's Corner

## CHOOSE THE CORRECT OPTION – "Prayer brings Victory"

1. b. Joshua
2. c. Prayed to God
3. d. He prayed and trusted God
4. c. An angel rescued him
5. a. Elijah
6. b. Three
7. c. Tax Collector
8. b. The jail doors opened.
9. c. Watch and Pray; lest you fall.
10. a. Prayed to the Father.
11. b. Prayed all night.
12. d. As often as you can

## Complete the Short Review Below...

1. The theme for the month of July/ August is: **PRAYER BRINGS VICTORY.**
2. How to pray for Victory –

   **PRAY WITH FAITH** – Believe that God hears and wants to help.

   **PRAY WITH A GOOD HEART** – Be honest and humble.

   **PRAY WITH THANKS** – Thank God before you see the answer.

   **PRAY FOR GOD'S WILL** – Ask God to do what is best, not what we expect.

   **PRAY AND WAIT** – Trust that God's answer will come at the right time.

3. JEHOVAH JIREH means "**The Lord will provide**."
4. **Mary Sleesor** was a missionary to a village in Africa.
5. James 5:13 says - **Is anyone among you in trouble? Let them pray.**
6. Bartholomew was otherwise called **Nathaniel.**
7. Psalms 56:3 says - **When I am afraid, I will put my trust in you.**

***Note : Submit the hard copy of the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***




## MEMORY VERSE COMPETITION 2025

This year the Memory Verse Competition will be conducted during usual Junior church Timings on 12th September 2025.

**Beginners, Primary** and **Juniors** will need to orally recite their assigned memory verses, face to face, within the allocated time.

**Inters, Seniors** and **Super seniors** will need to come prepared to write the allotted portion from memory and submit it within 1 hour.

## MEMORY VERSE PORTIONS FOR 2025

| SECTIONS | 2025 | | |
|---|---|---|---|
| | Portions | No. of Verses | Allocated Time |
| Beginners A (kg. 1) | Psalms 23;<br>+ The Lord's Prayer | 11 verses | 10 mins. |
| Beginners B (kg. 2) | Psalms 103: 1,2; Galatians 5:22 – 25<br>+ The Lord's Prayer | 11 verses | 10 mins. |
| Primary A (Gr. 1) | Psalms 119:1 - 16 | 16 verses | 15 mins. |
| Primary B (Gr. 2) | Psalms 1; 92 | 21 verses | 15 mins. |
| Primary C (Gr. 3) | Psalms 96; 97 | 25 verses | 15 mins. |
| Juniors A (Gr. 4) | Psalms 121 – 125<br>+ Books of the old Testament | 34 verses | 20 mins |
| Juniors B (Gr. 5; 6) | Psalms 119:41-80<br>+ Books of the old and new testament | 40 verses | 20 mins. |
| Intermediates (Gr. 7,8) | Psalms 119:121 - 176 | 56 verses<br>[written - Ps. 119: 161-176] | 1 hr. |
| Seniors (Gr. 9) | Psalms 31: 1 – 24<br>Psalms 27:1 – 14<br>Psalms 34: 1 – 22 | 60 verses<br>[ written - Ps. 34] | 1 hr. |
| Super Seniors<br>(Gr. 10; 11; 12) | Psalms – 1; 23; 34; 91; 103; 121 | 80 verses<br>[written - Ps. 103] | 1 hr. |

## Marking for Written Memory verse competition will be as follows

- 1 mark will be awarded for every correct and completed verse.
- No marks will be deducted for punctuations.
- 0.1 mark will be deducted for each spelling mistake and missing grammar.
- 0.25 marks will be deducted for every missing keyword.
- 0.50 marks will be deducted for every 3 or more words missing (segment of a sentence)
- 1 mark will be deducted if there is no memory verse number, or if the order of the memory verses is interchanged. Partial verses will not be counted.
- Handwriting should be legible. No marks will be awarded, if the correcting teacher is unable to comprehend what is written.
- Final marks will be scored out of 10.

## Criteria for The Competition Awards will be as follows:

| Level | Oral recitation | Written Competition |
|---|---|---|
| Outstanding | No prompts | 9.8 - 10 Marks |
| 1st Prize | 1 – 2 prompts | 8 – 9.8 Marks |
| 2nd Prize | 3 – 5 prompts | 6 – 7.9 Marks |
| 3rd Prize | 5 – 10 prompts | 4 – 5.9 Marks |
| Participation | For reciting incomplete no. of verses | Less than 4 Marks |



# வேத வினாக்கள்

## வேதாகமம் முழுவதும்

### (சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)

1. ஒன்பதாவது....??? (மூன்று பதில்கள்)
2. ஒன்பது பட்டணங்கள் இருக்கிற இரண்டு கோத்திரங்கள் எவை?
3. ஒன்பது இரத்தினங்களின் பெயர்கள் அனைத்தும் வரும் ஒரு வசனம் எது?
4. ஒன்பது குணநலன்களைக் கொண்ட கனி எது?
5. ஒன்பது வசனங்களைக் கொண்ட ஒன்பது சங்கீதங்களை எழுதுக.
6. ஒன்பதாம் சேனாபதி யார்?
7. ஒன்பதாம் மணி நேரம் என்ன வேளை?
8. ஒன்பதாம் மணி நேரத்தில் நடந்த இரு நிகழ்வுகள் என்ன?
9. ஒன்பதாம் நாளில் காணிக்கை செலுத்தினவன் யார்?
10. ஒன்பதாம் மாதம் மறுபெயர் என்ன?
11. ஒன்பதாம் மாதத்திலே ராஜா எங்கு உட்கார்ந்திருந்தான்?
12. ஒன்பதாம் மாதம் இருபதாம் தேதி நடந்த நிகழ்வு என்ன?
13. ஒன்பது வருஷம் சமாரியாவிலே ராஜ்யபாரம் பண்ணின ராஜா யார்?
14. ஒன்பதாம் வருஷம் மட்டும் எதனைச் சாப்பிட வேண்டும்?
15. ஒன்பதாம் வருஷத்தில் பிடிபட்டது எது?

*குறிப்பு : அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் எழுதிய விடைத்தாள்களை ஒப்படைக்கவும்.*

## ஜுலை - ஆகஸ்டு மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் வேதாகமம் முழுவதும் |
|---|---|---|
| 1 | அன்னாள் | 1 சாமுவேல் 2:1,10 |
| 2 | சாலொமோன் | 2 நாளா. 7 : 1 |
| 3 | எசேக்கியாவுக்கு | 2 நாளா. 32:24 |
| 4 | நெகேமியா | நெகேமியா 2:4,5 |
| 5 | தானியேல் | தானியேல் 6:10 |
| 6 | தானியேல் | தானியேல் 9:4 |
| 7 | அன்னாள் | லூக்கா 2:36,37 |
| 8 | மாயக்காரரை | மத்தேயு 6:5 |
| 9 | வேதபாரகர், பரிசேயர் | மத்தேயு 23:14 |
| 10 | மத்தனியா | நெகேமியா 11: 17 |
| 11 | வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய | நீதி. 28:9 |
| 12 | இயேசு | லூக்கா 22:44 |
| 13 | கொர்நேலியு | அப். 10:2 |
| 14 | பேதுரு | அப். 10:9 |
| 15 | பவுலும் சீலாவும் | அப். 16:25 |
| 16 | எலியா | யாக்கோபு 5:17 |
| 17 | பரிசேயன், ஆயக்காரன் | லூக்கா 18:10 |
| 18 | 1) சாயங்காலமான போது<br>2) அதிகாலையில்<br>3) இராமுழுவதும் | மத்தேயு 14:23<br>மாற் 6:46, லூக்கா 6:12, 9:28<br>லூக் 6:12 |
| 19 | 1) ஒரு மலையின் மேல் ஏறி<br>2) வனாந்தரத்தில் | மத்தேயு 14:23, மாற்கு 6:46, லூக்கா 6:12, 9:28<br>மாற்கு 1:35, லூக்கா 5:16 |
| 20 | 1) தானியேல்<br>2) இயேசு<br>3) பேதுரு<br>4) பவுல் | தானியேல் 6:10<br>லூக்கா 22:41<br>அப். 9:40<br>அப். 20:36 |

## ஜுலை - ஆகஸ்டு மாத வேத வினாக்களுக்கு பதில் அளித்தவர்கள்

1. Mrs. Ajita Ebi
2 Mrs.Desigta Jaison
3 Mr.Emmanuel
4 Mrs.Esther Pauline Rani
5 Mrs.Febell Jeevagi Thomas
6 Mrs.Geetha kannan
7 Mrs.Grace shekar
8 Mrs.Helen Sharmila Ray
9 Mrs.Hame RajaGuru
10 Mr.Jeba Jino
11 Mrs.Jasmine Sobha
12 Mrs.Jebaseeli Asir
13 Mrs.Jenila Gannraj.L
14 Mrs.Kishi Maher
15 Mr.Miehael
16 Mrs.Manuel Sarah
17 Mrs.Nandhini Rajkumar
18 Mrs.Peppin Jenson
19 Mrs.Persis John
20 Mr.Prawin Durai Sam
21 Mrs.Priya Ranjith Kumar
22 Mrs.Praveena Arun
23 Mr.Raja Guru
24 Mr.Salin Robert
25 Mrs.Selvi George
26 Mrs. Shobana Milton
27 Mrs.Sheeba Merlin
28 Mrs.Sheeba Herlin
29 Mrs.Sheneegah Stanly
30 Mrs.Sharmila Rajesh
31 Mrs. Shajeethe Gracy
32 Mrs. Subija Jino
33 Mrs.Sweetilin Frank

## Children who answered July & Aug – 2025 Quiz

1. Aadhav Steve Matthew
2. Adelyn Victoria Jeyaseelan
3. Brightson Timothy Raj
4. Benson Immanuel Raj
5. Camryn Robert.S
6. Clement Dave
7. Daniel Vanya (RUWAIS)
8. Danion Lemuel
9. Evelyn Gracia
10. Evelyn Loria V
11. Gabrilyn Hannah
12. Galvin Robert.S
13. Giana Elin
14. Hadriel Adventier
15. Janey Titus
16. Jarick Aaron
17. Jaslin Shanna
18. Jaylan Paul Jino
19. Joanna Paul Jino
20. Johanan Paul Jino
21. Jerilyn Pushpam Nelson
22. Jevlyn Ana
23. Jeya Jehosheba Maher
24. Jim Scott
25. Jen Scudd
26. Jeffrey Samuel
27. Jenessa Johnson
28. Joel Abrakam
29. Joha Anit Manuel
30. Johan Sam Manuel
31. Kathryn Joan
32. Kev Shannen P.S
33. Liana Erin
34. Leona Juliet
35. Leonel I.J. Stalin
36. Linuel I.J. Sherwyn
37. Nijolin Jose
38. Rivqah Deby Rajkumar
39. Sam Jesvin Vincent
40. Starlyne Noble
41. Yedidiah Arun (Ruwais)
42. Jabree Aaron
43. Yovaan jairus (Ruwais)
44. Steffi Priscilla .R
45. Eion Jayden
46. Diuas Dinesh
47. Defina
48. EricJayden Seniors
49. Evangelia Sharon
50. Efrona
51. Darion Lemuel
52. Jessica Eban
53. Kavin Immanel
54. Kavi yalini
55. Sherlyn Sana
56. Mishael Wesley
57. Alston Elvin
58. Effrin
59. Selvajesvin
60. Pristina samlynPrince
61. Nashley Vinod Kiran



# இயேசுவின் சீடர் தோமா

***இந்தியாவின் அப்போஸ்தலர்***

**மனம் திரும்பி சுகம் பெற்ற வாலிபன்**

கைகள் செயலிழந்த வாலிபன் பயந்து நடுங்கி, தோமாவின் பாதங்களில் விழுந்து, "ஐயா, தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்! நான் ஒரு கொலைகாரன். என் குற்றத்தை இயேசு கிறிஸ்துவும் எனக்கு மன்னிப்பாராக! ஒரு விபச்சாரியாக இருந்த ஒரு பெண்ணை நான் விரும்பினேன். அவளும் என்னை விரும்பினாள். உங்கள் மூலமாக கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்ட நான், அவரை விசுவாசித்து, ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டேன்.

சத்தியத்தை அறிந்த நான், அவளுக்கும் அதை அறிவித்து, நான் அவளைத் திருமணம் செய்து கொள்வதாகவும், விபச்சாரத் தொழிலை விட்டு விடுமாறும் கூறினேன். ஆனால் அவள் அதற்கு மறுத்து விட்டாள். அதனால்தான் அவள் மீது நான் கோபப்பட்டு, அவளைக் கத்தியால் குத்திக் கொன்றேன்" என்று கூறினான்.

அதற்கு தோமா, "எத்தனை போதனைகளைக் கேட்டும், பாவத்தை விட்டு முழுவதும் மனந்திரும்பாமல், கொலை செய்தவனே! உன் இச்சையை விட்டு ஒய மாட்டாயா?" என்று அவனை கண்டித்ததோடு, கொலை செய்யும்படி அவனைத் தூண்டிய சர்ப்பத்தின் ஆவியையும் கடிந்து கொண்டார்.

அப்பொழுது அவன் மனஸ்தாபப்பட்டு, தன் பாவத்தை முழுவதும் அறிக்கையிட்டான். பின்பு தோமா, அவனை பரிசுத்த ஆவியானவர் நிரப்பும்படியாக ஜெபித்தார். கர்த்தருடைய ஆவியானவர் அந்த ஜெபத்தைக் கேட்டு, தம் ஆவியினால் அவனை அளவில்லாமல் நிரப்பி, அவனுக்கு பூரணமான சுகத்தையும் கொடுத்தார்.

**மனந்திரும்பியவன், மரித்தவளை உயிரோடு எழுப்புதல்**

பின்பு தோமா, அந்தப் பெண் கொலை செய்யப்பட்ட இடத்திற்கு தன்னை அழைத்து செல்லும்படி அவனிடம் கூறினார். அந்த வாலிபன், தோமாவை ஒரு விபச்சார விடுதிக்கு அழைத்து

சென்றான். திரளான ஜனங்கள் சம்பவிப்பதை அறியும்படிக்கு அவர்களுடன் சென்றனர். அவர்கள் அங்கு சென்று பார்த்தபொழுது, ஒரு சிறிய அறையிலிருந்த ஒரு படுக்கையில் குத்திக் கொலை செய்யப்பட்ட நிலையில் அப்பெண்ணின் சடலம் கிடந்தது.

தோமா அந்த சடலத்தை அந்த விடுதியின் விசாலமான ஒரு பகுதிக்கு கொண்டு வரச் சொன்னார். பின்பு தோமா கர்த்தரை நோக்கி, ஆண்டவரே, நாங்கள் உம்மிடத்தில் பொன்னையோ, பொருளையோ, உலகத்தின் எந்தவொரு செல்வத்தையோ கேட்கவில்லை. ஏனென்றால் மண்ணிலிருந்து உண்டான அவையெல்லாம் மண்ணுக்கே திரும்பி வருகின்றன. ஆனால், மரித்த இப் பெண்ணை உயிரோடு நீர் எழுப்பும்படியாக நாங்கள் கேட்கிறோம். உம்முடைய வல்லமையின் மகிமை இதன் மூலமாக வெளிப்படவும், அனேகர் உம்மை விசாரிக்கும்படியாகவும் இதை செய்வீராக!" என்று சொல்லி ஜெபித்தார்.

பின்பு அந்த வாலிபனிடத்தில், "நீ உன் மனதை கர்த்தருக்கு நேராக திருப்புவாயாக! இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்திலிருந்து வெளிப்படுகிற ஆசீர்வாதங்களை தியானிப்பாயாக! இப்பொழுது நீ அவளுடைய கையைப் பிடித்து, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் விசுவாசத்தோடு அவளை உயிருடன் எழுப்புவாயாக!" என்றார்.

அவனும் அப்படியே செய்து, இறந்து கிடந்த அந்தப் பெண்ணின் கையைப் பிடித்து, "இயேசுவே, நீர் இவளுக்கு மறுபடியுமாக உயிர் கொடுத்து, உம்மீது அசைக்க முடியாத விசுவாசம் உள்ளவனாக என்னை மாற்றுவீராக! என்று சொல்லி ஜெபித்தான். அப்பொழுது அந்தப் பெண் உயிர் பெற்று எழுந்து உட்கார்ந்தாள்.

**நரகம்!**

உயிருடன் எழுந்த அந்தப் பெண் தோமாவின் காலடியில் விழுந்து, கனத்துக்குரிய பெரியவரே, பயங்கரமும், பயமும் நிறைந்த இடத்திலிருந்து என்னை விடுவித்து, உங்களிடத்தில் என்னை ஒப்படைத்து, "இவள் பூரணப்பட்டவளாக மாறுவாள்!" என்று கூறிய, உம்மைப் போன்ற பிரகாசமான சாயலை உடைய, அன்பு நிறைந்த அந்தப் பெரியவர் எங்கே என்று கேட்டாள்.

அதற்கு தோமா, "இறந்த பின் நீ எங்கிருந்தாய்?" என்று அவளிடத்தில் கேட்டார். அவள் தனக்கு நிகழ்ந்ததை பின்வருமாறு தோமாவுக்கு விவரித்து சொன்னாள்.

"நான் மரித்தவுடனே, கருப்பு நிறத்தில், அருவருக்கத்தக்க ரூபத்தில் அழுகிய பிண நாற்றமடித்த ஒருவன், (பிசாசு) என்னை மிகவும் பயங்கரமான பயம் நிறைந்த ஓரிடத்திற்கு அழைத்துச் சென்றான். சகிக்க முடியாத அளவிற்கு மிகுந்த துர்நாற்றம் வீசிக் கொண்டிருந்த அங்கே, முடிவே இல்லாத, அளவிட முடியாத அகலமும், உயரமுமான பெரிய அளவிலான குழியிலிருந்து, கீழிருந்து மேல்வரை அக்கினி பிழம்புகள் அணையாமல் தொடர்ந்து எரிந்து, சக்கரம் போல சுழன்று கொண்டே இருந்தன!

அங்கு ஆண்களும், பெண்களுமாக எண்ணிக்கைக்கு அடங்காத திரளான ஜனங்கள் அந்த அக்கினியில் எரிந்து கொண்டே இருந்தார்கள்.

- **தொடரும்**

# துணுக்குகள்

## பாடல் பிறந்த கதை

**நேர்த்தியானதனைத்தும் சின்னம் பெரிதெல்லாம்**
**[பாமாலை 243]**
**(All things bright and beautiful)**



***நேர்த்தியானதனைத்தும்***
***சின்னம் பெரிதெல்லாம்***
***ஞானம், விந்தை ஆனதும்***
***கர்த்தாவின் படைப்பாம்.***

*1. பற்பல வர்ணத்தோடு*
*மலரும் புஷ்பமும்,*
*இனிமையாகப் பாடி*
*பறக்கும் பட்சியும்.*

*2. மேலோர், கீழானோரையும்*
*தத்தம் ஸ்திதியிலே,*
*அரணில், குடிசையில்*
*வசிக்கச் செய்தாரே*

**'நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர்'. வெளி 4 : 11**

வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப் படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது என்னும் வார்த்தைகளில் தாவீதரசன் சிருஷ்டி கர்த்தாவின் மகிமையை விவரித்து இருக்கிறார். உலகம் உண்டானது முதல் இயற்கையின் அழகையும், சிருஷ்டிப்பின் பற்பல வகைகளையும் பார்த்து வியந்து, செய்யுள்களாகவும், பாடல்களாகவும் மனிதன் அவற்றை வர்ணித்து இருக்கிறான். ஆங்கிலக் கவிஞரான வில்லியம் வேர்ட்ஸ்வர்த் (William Wordsworth), இங்கிலாந்தில் 'ஏரிப் பிரதேசம்' (Lake District) என்னும் இயற்கை காட்சிகள் நிறைந்த இடத்தில் தங்கி அங்குள்ள எழில்மிகு காட்சிகளைப் பல செய்யுள்களில் வர்ணித்திருக்கிறார். ஆண்டவரும் சிருஷ்டிப்பின் மகிமையைக் காட்டுவதற்காக, காட்டு புஷ்பங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும் சுட்டிக் காட்டியிருக்கிறார். இப்பாடலை எழுதியவர் சிருஷ்டி கர்த்தாவின் படைப்புகளான பல அழகிய படைப்புகளைக் குறிப்பிட்டு, இவற்றை நாம் பார்க்கும்போது, சர்வ வல்ல

கர்த்தாவைப் போற்றக் கடமைப் பட்டுள்ளோம் என ஞாபகப் படுத்துகிறார். இப்பாடலை எழுதிய செசில் பிரான்ஸஸ் அம்மையார் (Cecil Frances Alexander), அயர்லாந்து நாட்டில் மலைகள், ஆறுகள், ஏரிகள் முதலிய இயற்கைக் காட்சிகள் நிறைந்த பகுதியில் பிறந்து வளர்ந்ததால், சிருஷ்டி கர்த்தாவின் மகிமையைப் பூரணமாக உணர்ந்தவர். இவரது கணவரான அருள்திரு. வில்லியம் அலெக்ஸாண்டர், டெறி என்னும் இடத்தில் அத்தியட்சராக இருந்தார். ஆதலால் பிரான்ஸஸ் அம்மையார் அநேக குழந்தைகளின் ஞானஸ்நானத்தில் ஞானத்தாயாக இருக்க நேர்ந்தது. பிள்ளைகள் வளர்ந்து வந்தபோது, ஆங்கிலத் திருச்சபை முறைப்படி அவர்களுக்கு ஞானோபதேசம் கற்றுக் கொடுத்து, அவர்களைத் திடப்படுத்தலுக்கு ஆயத்தம் செய்ய வேண்டியிருந்தது. ஆனால் ஞானோ உபதேசத்தின் பற்பல பகுதிகளை மனப்பாடம் பண்ணுவது பிள்ளைகளுக்கு உற்சாகம் அற்றதாகக் காணப்பட்டது. இதைவிட சுலபமான பகுதிகளைக் கொடுத்தால் நன்றாக மனப்பாடம் பண்ணலாம் எனப் பிள்ளைகள் கூறவே, அம்மையார் ஞானோபதேசத்திலுள்ள சித்தாந்தங்களைக் குறித்த செய்யுள்கள் எழுத ஆரம்பித்தார். ஞானோ உபதேசத்தில் குறிப்பிட்டுள்ள முதல் விசுவாசம் ‘வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்’ என்பதாகும். இதை அடிப்படையாகக் கொண்டு, ஒரு செய்யுளை ‘நேர்த்தியானதனைத்தும்’ அவர் எழுதி, சிருஷ்டி கர்த்தாவின் மகிமையைப் பிள்ளைகளுக்குப் போதித்தார். பிள்ளைகளும் இதனைப் பிரியமாக மனப்பாடம் செய்தனர். பின்னர், இதற்கு ‘மங்க்’ என்பவரால் எழுதப்பட்ட ஓர் அழகிய ராகம் அமைக்கப்பட்டு, இது ஒரு சிறுவர் பாடலாகப் பாடப்பட்டு வருகிறது.

இப்பாடலை எழுதிய செசில் பிரான்ஸஸ் அம்மையார் 1818ம் ஆண்டு அயர்லாந்து நாட்டில் பிறந்து, இயற்கை வளம் நிரம்பிய டைரோன், லண்டன்டெரி மாகாணங்களில் இளம்பிராயத்தைக் கழித்தார். முப்பத்திரண்டு வயதாயிருக்கையில், அருள்திரு. வில்லியம் அலெக்ஸாண்டரை மணந்தார். போதகர் முதலில் அர்மாக் என்னும் இடத்தில் அத்தியட்சராகவும், பின்னர் அயர்லாந்து நாடு முழுமைக்கும் பிரதம அத்தியட்சராகவும் பணியாற்றினார். அவரது ஊழியத்தில் அவரது மனைவி அதிக உதவியாயிருந்து, அநேக நற்பணிகளில் பங்கெடுத்தார். சபையிலுள்ள அனைத்து சிறுவர்களையும் திடப்படுத்தலுக்கு ஆயத்தப்படுத்துவதிலும், ஓய்வுநாட்பள்ளியை நடத்துவதிலும் அதிகமாக உழைத்தார். மேலும், தவறிப்போன பெண்களுக்கென ஓர் இல்லம் ஏற்படுத்தி, அதையும் நிர்வகித்தார். கிறிஸ்தவச் செய்யுள்களும், பாடல்களும் எழுதுவதில் அதிகத் திறமையுள்ள இவர், மொத்தத்தில் நானூற்றுக்கும் அதிகமான பாடல்கள் எழுதியுள்ளார். இப்பாடல்களில் சிறுவர் பாடல்களே அதிகமானவை.

# ஆராதனை மற்றும் நிகழ்வுகள் – செப்டம்பர் 2025




| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 2 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 5 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew’s church |
| 7 | ஞாயிறு | 11.00 am – 1.00 pm | உபவாச ஜெபம் |
| | | 7.00 pm – 8.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் |
| 9 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 12 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew’s church |
| | | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| 14 | ஞாயிறு | 5.30 pm – 6.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் – முசாபா |
| 16 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி - ஆயர் இல்லம் |
| 19 | வெள்ளி | 8.00 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew’s church |
| | | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| 21 | ஞாயிறு | 5.30 pm – 6.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் & ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 23 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 26 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew’s church |
| | | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| 30 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| | | 11.45 pm – 12.00am | மாத இறுதி ஜெபம் – ஆயர் இல்லம் |

# ஆராதனை பாடல்கள் – செப்டம்பர் 2025

| | |
|---|---|
| **05-09-25** | |
| பாமாலை – 19 | எவ்வண்ணமாக, கர்த்தரே |
| பாமாலை – 326 | ரட்சா பெருமானே பாரும் |
| கீர்த்தனை – 219 & 167 | நித்தம் முயல் மனமே!<br>நம்பி வந்தேன் மேசியா, நான் |
| பாமாலை – 8 | தந்தாய்! உம்மைத் துதித்தே |
| **12-09-25** | |
| பாமாலை – 5 | எல்லாம் சிஷ்டித்த நமது |
| பாமாலை – 370 | எனதன் ஆத்ம நேசரே |
| கீர்த்தனை – 226 & 283 | ஆத்தும ஆதாயம் செய்குவோமே<br>தோத்திர பாத்திரனே, தேவா |
| கீர்த்தனை – 8 | தெய்வன்பின் வெள்ளமே |
| **19-09-25** | |
| பாமாலை – 21 | சேனையின் கர்த்தா! |
| பாமாலை – 319 | உன் நெஞ்சிலே உண்டான |
| கீர்த்தனை – 230 & 156 | ஆண்டவர் பங்காக அனைத்தையும்<br>ஐயையா, நான் வந்தேன் |
| பாமாலை – 40 | மெய்ஜோதியாம் நல் மீட்பரே |
| **26-09-25** | |
| பாமாலை – 256 | விண்ணோர்கள் போற்றும் ஆண்டவா |
| பாமாலை – 151 | ஆறுதலின் மகனாம் |
| கீர்த்தனை – 187 & 306 | தந்தேன் என்னை இயேசுவே<br>இம்மட்டும் ஜீவன் தந்த |
| கீர்த்தனை – 173 | வாரும் ஐயா, போதகரே |

# திருமறை பாட ஒழுங்குகள் – செப்டம்பர் 2025

| தேதி | தியானப்பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 05-09-25 | நல்ல ஆசிரியர் [இயேசுவே மாதிரி] | உபாகமம் 8:1-10 | தீத்து 2:7-15 | மத்தேயு 11:25-30 | - |
| 12-09-25 | சேவையில் ஒன்றுபடுவோம் | யாத். 4:27-31 | 1 கொரி. 3:1-15 | யோவான் 15:1-14 | 27 |
| 19-09-25 | கடவுளும் பிற சமய மக்களும் | ஆமோஸ் 9:1-12 | ரோமர் 2:17-29 | யோவான் 10:14-18 | - |
| 26-09-25 | செயல்படும் ஆண்கள் | 2 இராஜா. 23:21-27 | 1 தெச. 5:14-28 | மத்தேயு 2:13-23 | 92 |

## செவ்வாய் கிழமை – ஏரியா ஜெப குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேதபகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| 02-09-25 | நீதிமொழிகள் | 15:18-33 | Al Wadha |
| 09-09-25 | நீதிமொழிகள் | 16:1-16 | Hamdan |
| 16-09-25 | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| 23-09-25 | நீதிமொழிகள் | 16:17-33 | Muroor |
| 30-09-25 | நீதிமொழிகள் | 17:1-14 | Mussafah |

| BIRTHDAY - SEPTERMBER | | |
|---|---|---|
| **Birth Date** | **Title** | **Name** |
| **2** | Mrs. | Kishi Frene Mahear |
| **2** | Mr. | Arul Sugirson Samuel. K |
| **2** | Ms. | Nancy Prescilla. N |
| **2** | Ms. | Nissy Lydia. N |
| **2** | Mrs. | Jenita Miracle |
| **2** | Mrs. | Tamizhamudhini |
| **3** | Mrs. | Persis Rani |
| **4** | Ms. | Emilyn Cynthia |
| **5** | Master. | Jim Scott |
| **5** | Master | Aaran Stefin |
| **6** | Mrs. | Helen Hema Geetha |
| **6** | Ms. | Steffi Priscilla |
| **6** | Mrs. | Christle Preethi Ansel |
| **6** | Mrs. | Goldina Thatcher |
| **7** | Mrs. | Rathibai Dennison |
| **7** | Mrs. | Elizabeth Juliet |
| **10** | Mr. | Jeya Mahear |
| **10** | Miss. | Nilani |
| **10** | Mr. | Sasi Kumar |
| **11** | Baby. | Pristina Samlyn |
| **12** | Mrs. | Tania Cecil |
| **14** | Mrs. | Maria Elizabeth Samuel |
| **14** | Master. | Jared Isaac Johnson |
| **15** | Ms. | Nijolin. J |
| **15** | Mrs. | Silvia Annie |
| **15** | Mrs. | Persis Seljah Manoharan |
| **15** | Baby | Thea Harel |

| BIRTHDAY - SEPTERMBER | | |
|---|---|---|
| **Birth Date** | **Title** | **Name** |
| **16** | Mr. | John Michael Franklin E. |
| **17** | Mr. | Julious Agastian |
| **17** | Mrs. | Merlin Jeba Kins |
| **19** | Mr. | Arnold A |
| **19** | Mrs. | Petricia |
| **20** | Ms. | Sherlin Jerusha Getziyal. J |
| **20** | Mr. | Evanjin Vetha Raja |
| **20** | Ms. | Caroline Danial Abraham |
| **20** | Baby | Danica |
| **21** | Mrs. | Sheeba Daniel |
| **21** | Mrs. | Geetha Leslie |
| **21** | Mr. | Felix Mathew |
| **22** | Mrs. | D. R. Ajita Steffia Liz |
| **22** | Mr. | Joe Vivek David |
| **22** | Mr. | Merlin Bright A M |
| **23** | Ms. | Edrina. R |
| **24** | Master. | Jonas Brendan. J |
| **24** | Mrs. | Baulin Jinilet |
| **25** | Ms. | Anita Josceline |
| **26** | Mrs. | Hema Alphonsa |
| **26** | Ms. | Giftlin Jeyamalar |
| **26** | Mrs. | Suni Smila |
| **28** | Mr. | Anti Grapeson D |
| **29** | Mrs. | Adlin Cherisha D J |
| **29** | Master | Oliver Franklin |
| **30** | Mr. | Arul Mozhi Varman |
| **30** | Ms. | Angelin Mizpah |
| **30** | Mrs. | Beena Kumari. R |
| **30** | Mr. | Stephenson |

# HAPPY ANNIVERSARY!

## Wedding Anniversary - September

| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mr. & Mrs. | Davidraja Manimaran |
| 2 | Mr. & Mrs. | Jeya Seelan Gabriel |
| 2 | Mr. & Mrs. | Julian John |
| 2 | Mr. & Mrs. | Emmanuel Vanya. J.P |
| 2 | Mr. & Mrs. | Prince Trison |
| 5 | Mr. & Mrs. | Rejin Raj Manuel. R |
| 7 | Mr. & Mrs. | Ranjith Kumar. J |
| 9 | Mr. & Mrs. | S. Ebi Tenniyson |
| 10 | Mr. & Mrs. | Leslie Manohar Isaac. W |
| 11 | Mr. & Mrs. | Santhosamani |
| 25 | Mr. & Mrs. | Immanuel Stanly |
| 29 | Mr. & Mrs. | Sujil |
| 30 | Mr. & Mrs. | Joslin Ananth N. |


CSI TAMIL PARISH ABU DHABI
JUNIOR CHURCH RETREAT
WATCH & PRAY
Matthew 26:41
AUGUST 22ND 2025 (FRIDAY)
6.30 PM - 8:00 PM
VENUE - ST. ANDREWS COMMUNITY CENTRE
0557270865 - Mr. Ranjith
0547401421 - Rev. Dr. A. Samuel
Join us for a fun time of Singing, Stories and lots of fun!!








JESUS
Is My Teacher